# பாரதியார் கவிதைகளில் வாழ்வியல் சிந்தனைகள்

முனைவர் ப.லெனின் குமார்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
எஸ் ஆர் எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
காட்டாங்குளத்தூர்–603203 .

14

## ஆய்வின் நோக்கம்

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கவிஞர்களுள் நிகரற்ற கவிஞராக திகழ்ந்தவர் பாரதியார்.பழமையைப் போற்றி புதுமையை வரவேற்கும் சிந்தனையாளராக விளங்கியவர்.அதை தன்னுடைய படைப்பு முழுவதிலும் வெளிப்படுத்தியுள்ளார். தன்னுடைய சிந்தனையை புதிய சொற்களால் வெளிப்படுத்தினார்.சாதி, பெண்ணியம்,இயற்கை, காதல், கல்விச்சிந்தனை, எனும் வாழ்வியல் சிந்தனைகளை கூறியிருப்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

சங்க காலம் தொட்டு இக்காலம் வரை நம் தமிழ் மொழியில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றி வளர்ந்துள்ளன.பைந்தமிழ் என்றும் செந்தமிழ் என்றும் போற்றப்பட்டு வரும் நம் தமிழ்மொழிக்கு நல்ல உரமான வளமான கவிதைகளை அளித்து நம்மிடையே விழிப்புணர்வை உண்டாக்கிய மாபெரும் கவிஞன்தான் பாரதி.இந்திய விடுதலையின்போது நாட்டு மக்களுக்கு போராட்ட உணர்வினை ஊட்டியவர்.

"வந்தே மாதரம் என்போம் – எங்கள்
மாநிலத் தாயை வணங்குவோம் என்போம் "[1]

என்ற பாடல் வரி மூலம் படிக்காத பாமர மனிதனுக்கும் நம் நாட்டின் மீது பக்தியினை உண்டாக்கியது .பாரதியார் நம்மிடையே வாழ்ந்த காலங்கள் குறைவாக இருந்த போதிலும் அவர் படைத்த கவிதைகள் சாகா வரம் பெற்றவை.விடுதலை வேட்கைக்கு தமிழை ஒரு கருவியாகப் பயன்படுத்திய பாரதி சமூக அவலங்களை அதன் வழியாக எதிர்க்கவும் அஞ்சவில்லை.பாரதி தனது கவிதை மூலமாக அடைந்த சிறப்பினை "பாரதியார் கவிதைகளில் வாழ்வியல் சிந்தனைகள்". என்ற தலைப்பின் கீழ் காணலாம்.

## சாதி

உலகில் வேறு எங்கும் இல்லாத சாதிப் பிரிவுகள் நம் நாட்டில் மட்டுமே உண்டு .பிறப்பால் செய்யும் தொழிலால் உயர்ந்தவன்,தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டால் ஏற்படும் கொடுமைகளைப் பாரதியார் கடுமையாகச் சாடுகிறார்.தாழ்ந்த சாதி என்ற பெயரால் இம்மக்கள் அனுபவிக்கும் துன்பத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்கிறார்

“விடுதலை! விடுதலை! விடுதலை
பறையருக்கு மிங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை” 2

சாதி இரண்டொழிய வேறில்லை என்னும் தராக மந்திரத்தை நாடு கொண்டிருந்தாலும் இன்றும் நம் நாட்டில் சாதிக் கொடுமைகள் ஒழியவில்லை.ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு நீதி சொல்லும் சாத்திரத்தை கண்டிக்கும் வகையில் அது சாத்திரமல்ல சதி என்கிறார்

“ சூத்திரனுக்கொரு நீதி தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின் அது
சாத்திரமன்று சதியென்று கண்டோம்”3

என்று பாடுகிறார்.

**பெண்ணியச் சிந்தனைகள்**

“தையலை உயர்வு செய்”4 என்று தன் ஆத்திச்சூடியிலே தொடங்கும் பாரதி பெண் விடுதலை வேட்கை தூண்டும் வகையில் மாதர் தன்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம். மாதவர்க்கும் சுதந்திரம் என்று புதுமைப் பெண் வாயிலாக நவீன கருத்துக்களை பாரதியார் கூறுகிறார் .

“அறிவு கொண்ட மனித உயிர்களை
அடிமையாக்க முயல்பவர் பித்தரம்” 5

என்னும் பாடல் மூலம் ஆணும் பெண்ணும் நிகரனக் கொள்வதில் அறிவில் சிறந்து இவ்வுலகம் மேன்மை அடையும் என்றும், நாணமும் அச்சமும் யாருக்கு வேண்டும் ஞான நல்லறம், வீர சுதந்திரம் இவையே நற்குடி பெண்களுக்கு இயல்பான குணங்களாகவும் கூறுகின்றார்.

பெண் என்பவள் ஆடவனின் கட்டளைக்கு அடங்கி ஒடுங்கி அடிமையாகவும் அவள் ஒரு போகப் பொருளாகவும் நினைத்த சமூக அமைப்பை வெறுத்து ஒதுக்கியவர் பாரதியார்.தாய் நாட்டிற்கு சுதந்திரம் எவ்வளவு இன்றியமையாததோ அதைவிட தாய் குலத்திற்கு சுதந்திரப் போக்கு மிகவும் அவசியம் என்பதை

“மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்”6

என்ற பாடல் மூலம் எடுத்துரைக்கிறார்.

**அறிவியல் பார்வை**

இன்று உலகம் தகவல் தொழில் நுட்பத்தினால் உள்ளங்கையில் அடக்கப்படுகிறது.ஓர் இடத்து செய்தி மற்றோர் இடத்திற்கு அல்லது உலகத்தில் எம்முனைக்கும் பரவ விண்ணில் கோள்கள் ஏவப்படுகின்றன. நம் பாரத நாடு உலகின் தலைசிறந்த நாடாக வளர வேண்டும் தமிழன் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று எண்ணிய பாரதி

"காசி நகர் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்."[7]

என்று பாடினார். பாரதியின் கனவால் வானொலி உருவாயிற்று பின்பு அது தொடர்ந்து தொலைக்காட்சி மின் கணினி என பல சாதனங்கள் தோன்றி விட்டன

**மொழிப்பற்று**

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனச் சான்றோர் கூறியது போல தாம் பெற்றுள்ள் தமிழ் உணர்வைத் தமிழின் தீஞ்சுவையைக் குழந்தைகளுக்கும் ஊட்ட ஆவல் கொண்டார் பாரதி

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே-அதைச்
தொழுது படித்திடடி பாப்பா"[8]

எனக் குழந்தைகளுக்கு அறிவுறுத்துகிறார்.

தமிழ் நாட்டினைப் பற்றியும் தமிழ் மொழிப் பற்றியும் பாரதி போற்றிப் பாடியுள்ளார்.இச்செயலே அவருடைய மொழிப்பற்றை விளக்குகிறது.புதிய கலைகள் தமிழ் மொழியில் வளர வேண்டும் என்பதை,

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்." [9]

என்கிறார்.தமிழ் மொழியின் வளர்ச்சி பரந்த எல்லையை நோக்கிச் செல்ல வேண்டும் என்னும் ஆர்வத்தில் அவர்

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்" [10]

என்கிறார்.

**இயற்கை**

மனித இனத்திற்கு வழிகாட்ட ஒளியும் ஒளி காட்ட இருளும் அவசியம்.இவை இரண்டும் உலகத்தின் இரு கண்கள். இதில் ஒன்று மறைய மற்றது வெளிப்படும். இது இயற்கை.ஆனால் இவை இரண்டும் உரசிக் கொள்ளும் நேரமான அந்திப் பொழுதின் அதிசயத்தை வர்ணிக்கும் பாரதியின் கூற்றாக

"அடிவானத் தேயங்கு பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினோடு கழலக் காண்பாய்

இடவானத் தொளி மின்னல் பத்துக் கோடி
யெடுத்தவற்றை யொன்றுபட வுருக்கி வார்த்து
முடிவான வட்டத்தைக் காளி யாங்கே
மொய்குழலாய் கழற்றுவதன் மொய்ம்பு காணாய்
வடிவா தொன்றாகக் தகடிரண்டு
வட்டமுறச் சுழலுவதை வளைத்துக் காண்பாய்”[11]

என்று சூரியனின் அஸ்தமனத்தைப் பாடி நம் மனதில் இயற்கையின் எழிலை நிலை நிறுத்தச் செய்கிறார்.

உலகில் நாம் மகிழ்ச்சியாக வாழ இனியன எவை என்று தம் வசன கவிதையில் பஞ்சபூதமும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரக் கூட்டமும், இனியன என்று பட்டியலிட்டு காட்டுகிறார்.

“இவ்வுலகம் இனியது இதில் உள்ள வான் இனிமையுடைத்து
காற்று இனிது
தீ இனிது நீர் இனிது நிலம் இனிது
ஞாயிறு நன்று திங்களும் நன்று
வானத்துச் சுடர்கள் எல்லாம் மிக இனியன.”[12]

என்று ஒரு தாய் கூறும் இயற்கை வர்ணனைகளான நிலா, மழை, நதிகள், மலைகள், அருவிகள், வானம், போன்ற இயற்கை காட்சிகளை குறிப்பிடுகிறார்.

**கல்விச் சிந்தனை**

அறிவே வலிமை, அச்சமின்மையே கல்வி, கல்வியே செல்வத்தின் தாய். கல்வி இல்லாதவர் உவர் நிலம் போன்றவர்கள் என்றெல்லாம் கூறும் பாரதி பாரத விடுதலைக்கும் கல்வி அவசியம் என்கிறார். உயிர் வாழ உணவு அவசியமாவது போல் மனிதன் வாழ்வதற்கு கல்வி அவசியம் என்கிறார்.

“வயிற்றுக்கு சோறிட வேண்டும்- இங்கு
வாழும் மனிதரக்கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.”[13]

என்று உலகத்தை உயர்த்த கல்வி அவசியம் என்கிறார்.

கல்வி இரு பாலினருக்கும் இன்றியமையாதது எனினும் பெண்ணுக்கு மிக மிக இன்றியமையாதது என்கிறார் பாரதி. பெண்கள் அறிவை வளர்ப்பது மூலமாக இந்த உலகம் சிறந்து விளங்கும் என்று பெண் கல்வியின் பயனை கூறுகிறார். பெண்கள் ஆணுக்கு அறிவில் குறைந்தவர்கள் அல்லர். அவர்களுக்கு கல்வி கொடுப்பதை தடை செய்தல் கூடாது என்கிறார். அக்கல்வியின் சிறப்பை இப்பாடல் உணர்த்துகிறது

"இருளை நீக்கி ஒளியினைக் காட்டுவாய்,
இறப்பை நீக்கி,அமிர்தத்தை ஊட்டுவாய்""14

**காதல்**

காதலை பாடாத கவிஞர்கள் இல்லை.இந்த உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது காதலால் தான். ஒரு சாதாரண மனிதனை கவிஞன் ஆக்குவது காதல்.ஆனால் பாரதியின் பார்வை சற்று வித்தியாசமானது. பாரதி கண்ணம்மாவை மானசீகமாக அவருக்கு உரிய பாணியில் வர்ணிக்கிறார். காதலின் உணர்ச்சி மீறுதலே வெளிப்பாடு. அதனை நயமாக எடுத்துரைத்தார்.

"சுட்டும் விழிச் சுடர்தான் கண்ணம்மா
சூரிய சந்திரரோ"15

என்று தன் கண்ணம்மாவின் கண்களுக்கு அச்சுறுத்தக் கூடிய, தகிக்கக் கூடிய சூரியனைப் போன்ற கூரொளி மிக்க கண்ணும், அருளையும்
மயக்கத்தையும், குளிர்ச்சியும் தரக்கூடிய சந்திரனைப் போன்ற கண்ணும் உள்ளது என்கிறார் .காதலை ஏற்றுக் கொண்டு வெளிப்படுத்தும் அவயங்களில் முதலில் கண். அடுத்தது புன்னகை. புன்னகை ஒன்று தான் காதலில் குழப்பம் இல்லாத தெளிவான வெளிப்பாடாகும். கண்ணம்மாவின் புன்னகையை

"சோலை மலரொளியோ நினது
சுந்தரப் புன்னகை தான்"16

என்று கூறுகிறார்.

கண்ணம்மாவை மட்டும் அல்ல கண்ணனையும் காதலியாக நினைத்து பல கவிதைகள் படைத்துள்ளார் பாரதி. கண்ணனை காதலியாகவும் தன்னை காதலனாகவும் நினைத்த பாரதி அவர்கள் பிரிவையும் தவிப்பையும் மிகவும் நயமாக எடுத்து உரைத்துள்ளார்.

"உணவு செல்லவில்லை சகியே
உறக்கம் கொள்ளவில்லை

மணம் விரும்பவில்லை சகியே
மலர் பிடிக்கவில்லை”17

காதல் வந்த பிறகு பாரதிக்கு தவிப்பும் வந்து விடுகிறது. காதல் வலிகள் அவரை வாட்டி வதைக்கின்றன. உணவு, பசி, உறக்கம், இல்லாமல் மனம் குழம்பி நிலையில் நிம்மதி இல்லாமல் புலம்புகிறார்.

## முடிவுரை

தமிழ் இலக்கியங்களில் மக்களின் பண்பாடும் வாழ்வியலும் கலந்து உள்ளது.அந்த வகையில் பாரதி தன் கவிதையில் பெண்ணியம், சமூக விடுதலை, அழகியல், மொழிப்பற்று, அறிவியல், இயற்கை என தமிழர் வாழ்வியலை படம்பிடித்து காட்டியுள்ளார்.

**அடிக்குறிப்புகள்:**

1)பாரதியார் கவிதைகள்–ப.112
2)மேலது–ப.151
3)மேலது–ப.115
4)மேலது–ப.219
5)மேலது–ப.135
6)மேலது–ப.220
7)மேலது–ப.116
8)மேலது–ப.225
9)மேலது–ப.141
10)மேலது–ப.141
11)மேலது–356
12)மேலது–380
13)மேலது–72
14)மேலது–85
15)மேலது–265
16)மேலது–266
17)மேலது–258

**துணை நூற்பட்டியல்**

1)பாரதியார் கவிதைகள்
உமா பதிப்பகம்
58, ஐயப்ப செட்டி தெரு
மண்ணடி
சென்னை 600 001

2)பூவும் கனியும்–சுந்தர வடிவேலு
கலைக்கதிர் வெளியிடு
கோவை.